WILD FOREST FOUNDATION
wild-forest.org

தீம்புனல்

பக்கங்கள்: 06

THEEMPUNAL
தீம்புனல்
மாலைப் பதிப்பு




theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:17 | 23.11.2023 வியாழக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053

# இளவயது தமிழ் பெண் நீதிபதி

இலங்கை நீதித்துறை வரலாற்றில் மிக இளவயதில் நீதிபதியாக மாதுரி நிரோசன் [32] என்ற தமிழ் பெண் ஒருவர் தேர்வாகியுள்ளார். யா/சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியின் பழைய மாணவியான இவர் எதிர்வரும் முதலாம் திகதி பதவிப்பிரமாணம் செய்யவுள்ளார். தனது 31 ஆவது வயதில் நீதிபதியாக பதவியேற்கவுள்ளார்.

மாதுரி நிரோசன் நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற நீதிபதிகளுக்கான போட்டியில், அகில இலங்கை ரீதியில் 12 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து தெரிவான இளம் தமிழ் நீதிபதி என்ற சிறப்பையும் இவர் பெற்றுள்ளார்.

இலங்கையில் தமிழ் நீதிபதிகள் உருவாகுவது எட்டாக் கனியாகவே உள்ள நிலையில், மாதுரி நிரோசனுக்கு பலரும் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துவருகின்றனர்.



# அமெரிக்கத் தூதுவருக்கு அச்சுறுத்தல் விடுத்த சரத் வீரசேகர சந்திம வீரக்கொடி

பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, அமெரிக்கத் தூதுவருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக நேற்று (22) பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பாராளுமன்றம் எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லாமல் செயற்படுகிறது. இங்கு இடம்பெறும் செயற்பாடுகளால் ஒட்டுமொத்த மக்களும் பாராளுமன்ற கட்டமைப்பை வெறுக்கிறார்கள்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவரது செயற்பாடுகளினால் பாராளுமன்றத்தின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது.



பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் 9 (அ) பிரிவில் ‘பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை மற்றும் குழுக்களின் அறிக்கைகள் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன் வெளியாட்களுக்கு வழங்குவது தண்டனைக்குரிய குற்றம்’ என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

துறைசார் மேற்பார்வை குழுவின் முன்னெடுக்கப்பட்ட தீர்மானங்கள் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படாமல் கடந்த மாதம் 19 ஆம் திகதி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் ஊடகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது முற்றிலும் பாராளுமன்றக் கோட்பாடுகளுக்கு எதிரானது. தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவர் சரத் வீரசேகர இலங்கைக்கான அமெரிக்க தூதுவருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார். இது முற்றிலும் தவறானதொரு செயற்பாடு...

(பக்:02)

# விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைத் தேடும் படையினர்

போரின் இறுதி நாட்களில் முள்ளிவாய்க்கால் மேற்குப் பகுதியில் உள்ள கடற்கரைப்பகுதி ஒன்றில் விடுதலைப்புலிகளால் புதைத்து வைத்ததாக நம்பப்படும் இடம் ஒன்றில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய தோண்டும் நடவடிக்கை இன்று (23) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு கடந்த 19 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் தொடரப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு பொலிஸின் விசேட புலனாய்வாளர்களுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய குறித்த பகுதியில் விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் மற்றும் பெறுமதியான பொருட்களைப் புதைத்து வைத்துள்ளதாக நம்பப்படும் இடத்தில் தோண்டுவதற்கு நீதிமன்றத்தில் கடந்த 19 ஆம்திகதி வழக்குத் தொடரப்பட்டு நீதிபதியின் அனுமதியுடன் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலை யில் பொலிஸார், விஷேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர், கிராம சேவையாளர், தொல்லியல் திணைக்களத்தினர், சுகாதாரப் பிரிவினர்,....

(பக் : 02)

# வீடியோ மூலம் பெண்களை மிரட்டியவர் கைது

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அருகிலுள்ள நீராவியடி பகுதியில்இரவு நேரங்களில் வீட்டு உரிமையாளருக்கு தெரியாமல் வீட்டிற்குள் புகுந்து குளியல் அறையில் கமரா மூலம் வீடியோக்களை எடுத்து மிரட்டிய ஒருவர் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபருக்கு எதிராக பெண்கள், சிறுமிகள் பொலிஸ் பிரிவில் முறைப்பாட்டை பதிவு செய்ததன்.....

(பக்:02)

## அமெரிக்கத் தூதுவருக்கு அச்சுறுத்தல் விடுத்த.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழு ஊடாக எச்சரிக்கை விடுக்க முடியுமா? முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அதுகோரல வின் படுகொலை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் படுகொலை தொடர்பில் துறைசார் மேற்பார்வைக்குழு பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. அத்துடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எனவே இவ்விடயம் முற்றிலும் தவறானது. தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் சரத் வீரசேகரவின் தன்னிச்சையான தீர்மானங்களினால் எமது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது.

ஆகவே இவ்விடயம் தொடர்பில் பாராளுமன்ற சிறப்புரிமை மற்றும் ஒழுக்கவியல் குழு ஊடாக விசாரணைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்துகிறேன் என தெரிவித்துள்ளார்.

## விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைத் தேடும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடயவியல் பொலிஸார் ஆகியோரின் பிரசன்னத்துடன் இன்று (23) காலை 9 மணிக்கு குறித்த அகழ்வு பணி இடம்பெற்று வருகின்றது.

கனரக இயந்திரம் கொண்டு தோண்டப்பட்டபோது நிலத்திலிருந்து நீர் வருவதை அவதானிக்க முடிந்துள்ளது இருந்தும் தொடர்ச்சியாக குறித்த இடத்தினை அகழ்வு பணி செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது

மேலும் மற்றுமொரு கனரக இயந்திரம் கொண்டு தோண்டும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

குறித்த பகுதிக்கு அண்மையில் கடந்த பங்குனி மாதமளவில் அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்ட நிலையில் எதுவும் மீட்கப்படாத நிலையில் மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வீடியோ மூலம் பெண்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

சந்தேக நபரை கண்காணிப்பு கமரா உதவியுடன் கைது செய்த யாழ்.பிராந்திய பொலிஸ் புலனாய்வு பிரிவினர் குறித்த நபரை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் சிறுவர் பெண்கள் பிரிவில் பாரப்படுத்தினர்.

## கிளிநொச்சியில் தாழிறங்கிய கிணறு

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தர்மபுரம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஒருவரது கிணறு திடீரென நேற்று (22) தாழிறங்கியது. கிணற்றில் பொருத்தப்பட்டிருந்த நீர் இறைக்கும் பம்பியும் கிணறில் மூழ்கியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக கிராம அலுவலகரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 20 வருடங்களுக்கு மேல் சுத்தமான குடிநீரை அயலவர்களும் பயன்படுத்தி வந்தனர்.

## சுற்றாடல் அமைச்சர் வெளிநாடு செல்ல அனுமதி

சுற்றாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதி வரை வெளிநாடு செல்வதற்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க இன்று (23) அனுமதி வழங்கியுள்ளார்.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது, தொலைக்காட்சி கூட்டுத்தாபனத்தின் பணத்திலிருந்து 9,90,000 ரூபாவை பு.ஐ.டீ ஐ கொள்வனவு செய்ததன் மூலம் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுத்தியதாகத் தொடரப்பட்ட வழக்கின் விசாரணையின் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் சில கடமைகளுக்காக வெளிநாடு செல்ல அனுமதிக்குமாறு அமைச்சர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றில் அறிவித்தார்.

இதன்படி, அனுமதி வழங்கிய நீதிபதி, அவருக்கு எதிராக ஒதுக்கப்பட்ட வழக்கை எதிர்வரும் டிசம்பர் மாதம் 01ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

## ராஜபக்ஷகளின் குடியுரிமையை இரத்து செய்ய கையெழுத்து போராட்டம்

நாட்டை வங்குரோத் தாக்கிய நபர்களின் பிரஜா உரிமைகளை இரத்துச் செய்யுமாறும், இவர்களுக்கு இனிமேலும் அரச ஆதரவின் கீழ் சலுகைகள் வழங்கப்படக்கூடாது என்றும், நாட்டின் வங்குரோத்து நிலையால் பாதிக்கப்பட்ட 220 இலட்சம் பேருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் எனக் கோரியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டணியும் இன்று (23) கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக பொதுமக்கள் கையெழுத்து திரட்டும் பணியை ஆரம்பித்தது.

நீதிக்கான மக்கள் ஆணையைக் கட்டியெழுப்புவோம் எனும் தொனிப்பொருளில் கையெழுத்து திரட்டும் வேலைத்திட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் இன்று காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## பாலியல் இலஞ்சம் கோரிய பொலிஸ் அதிகாரி கைது

கல்முனையில் பெண் ஒருவரை பாலியல் இலஞ்சம் கோரிய 59 வயதுடைய பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் கொழும்பிலிருந்து வந்த இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் நேற்று புதன்கிழமை (22) கைது செய்யப்பட்டுள்ளதாக கல்முனை பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பெண் ஒருவர் ஏற்கெனவே குற்றச்செயல் ஒன்றில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற பிணையில் வெளிவந்து மாதத்தில் ஒருநாள் நீதிமன்றம் சென்று கையெழுத்து இட்டுவரும் பெண்ணை அங்கு கடமையாற்றி வரும் கல்முனை பொலிஸ் தலைமையகத்தைச் சேர்ந்த 59 வயதுடைய பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் பாலியல் இலஞ்சம் கோரியுள்ளார்.

இது பற்றி பாதிக்கப்பட்ட பெண் கொழும்பிலுள்ள இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்தார்.

அவர்களின் வழிகாட்டலில் கல்முனை கடற்கரைப் பகுதியிலுள்ள உல்லாச விடுதி ஒன்றில் கொழும்பில் இருந்து வந்த இலஞ்ச உழல் பிரிவினர் மாறுவேடத்தில் சம்பவ தினமான நேற்று காலை 9.30 மணிக்கு கண்காணித்தனர்.

பலாலியல் இலஞ்சம் கோரிய பொலிஸ் அதிகாரியை விடுதிக்கு வருமாறு பெண் அழைத்தார். விடுதிக்குச் சென்ற பொலிஸ் அதிகாரி அறைக்குள் நுழைந்த போது மறைந்திருந்த இலஞ்ச ஒழிப்பு பிரிவினர் பொலிஸ் அதிகாரியை மடக்கிப்பிடித்து கைது செய்துள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்டவரை விசாரணையின் பின்னர் அம்பாறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியபோது அவரை 28 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டதையடுத்து குறித்த பொலிஸ் அதிகாரியை கொழும்பிற்கு இலஞ்ச ஒழிப்பு பிரிவினர் அழைத்துச் சென்றுள்ளனர்

# எக்ஸ் தளத்தின் வருமானம் மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும்

இஸ்ரேல், காஸாவில் போர் நடந்து வரும் நிலையில் அப்பகுதி மக்கள் பெரும் துன்பத்திற்கு உள்ளாகி உள்ளனர். மருத்துவ வசதி கூட கிடைக்காமல் திண்டாடி வரும் நிலையில் எக்ஸ் தளத்தின் விளம்பர வருவாய், சந்தாதாரர்கள் மூலம் கிடைக்கும் வருமானத்தை போரினால் பாதிக்கப்பட்ட இஸ்ரேல், காஸா மருத்துவமனைக்கு நன்கொடையாக வழங்கப்படும் என எலான் மஸ்க் தெரிவித்துள்ளார். அவரது இந்த அறிவிப்புக்கு பலர் பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர்.



எலான் மஸ்க் கொடுக்க போகும் பணத்தை வைத்து காஸா, இஸ்ரேல் பகுதியில் உள்ள பள்ளிகள் மருத்துவமனை ஆகியவற்றுக்கு செலவழிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் பிணைக் கைதிகளை விடுவிக்க நான்கு நாட்களுக்கு போரை நிறுத்துவதாக இஸ்ரேல் பிரதமர் அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கடலில் வீழ்ந்தது இராணுவ விமானம்

ஹவாய் இராணுவத்திற்கு சொந்தமான விமானம் ஒன்று கடலில் விழுந்ததை அடுத்து அதிலிருந்து ஒன்பது இராணுவ வீரர்கள் நீந்திக்கரை சேர்ந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.



ஹவாய் கப்பல் படை சமீபத்தில் விமான பயிற்சியில் ஈடுபடும் போது திடீரென விமானம் தரையிறங்கிய போது பாதை மாறி கடலில் விழுந்தது.

இதனையடுத்து விமானத்தில் இருந்த ஒன்பது வீரர்கள் அதிஷ்டவசமாக கடலில் நீந்தி பாதுகாப்பாக கரைக்கு திரும்பினார்கள். அவர்களுக்கு எந்தவிதமான காயமும் இல்லை என்று கூறப்படுகிறது.

விமானப்படை தளத்தில் இராணுவ விமானம் திடீரென பாதை மாறி கடலில் விழுந்தது ஏன் என்பது குறித்து ஹவாய் இராணுவம் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

# சீனாவில் குழந்தைகளை அச்சுறுத்தும் நிமோனியா

சீனாவில் குழந்தைகளை அச்சுறுத்தும் நிமோனியா தொற்று வேகமாகப் பரவி வருவதால் அது குறித்து அந்நாட்டு சுகாதாரத்துறை தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளது. மேலும் இந்த நிமோனியா தொற்று தொடர்பான தகவல்களைப் பகிரும்படி அந்நாட்டுக்கு உலக சுகாதார நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.



ஊடகச் செய்திகளின் படி சீன மருத்துவமனைகளில் குழந்தைகள் நோய் வாய்ப்பட்டு சிகிச்சைக்கு அழைத்துவரப்படும் போக்கு மிக அதிகமான அளவில் அதிகரித்துள்ளது.

குழந்தைகள் அனைவருமே சுவாசக் கோளாறுடனேயே அழைத்துவரப்படுகின்றனர் என்றும் அந்தத் தகவல் தெரிவிக்கின்றது.

இது தொடர்பாக நவம்பர் 12 இல் சீன தேசிய சுகாதார ஆணையம் செய்தியாளர்கள் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தது. அதில், கொரோனா கட்டுப்பாடுகளைத் தளர்த்தியதன் எதிரொலியாகவே இந்தப் புதிய தொற்று ஏற்பட்டுள்ளதாக கூறப்பட்டதாகத் தெரிகிறது.

# ஒஸ்கார் விருது வென்ற நடிகர் மீது பாலியல் வழக்கு

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல நடிகர் ஜேமி பாக்ஸ் (வயது 55). காமடியன், பாடகர் என பன்முகத் திறமை கொண்ட இவர் சிறந்த பாடகருக்கான கிராமி விருது பெற்றுள்ளார். 2005 ஆம் ஆண்டில் புகழ்பெற்ற இசைக் கலைஞரான ரே சார்லஸ் வாழ்க்கை வரலாறு தொடர்பான 'ரே' என்ற திரைப்படத்திற்காக ஒஸ்கார் விருது பெற்றார். இந்நிலையில், ஜேமி பாக்ஸ் மீது ஜேன் டோ என்ற பெண், பாலியல் வழக்கு தொடர்ந்துள்ளார்.



2015 இல் இந்த சம்பவம் நடந்ததாக மனுவில் கூறியிருக்கிறார்.

மன்ஹாட்டனில் உள்ள ஒரு பாரின் மேல்தளத்தில் வைத்து, பாக்ஸ் எனது அனுமதியின்றி என்னைத் தொட்டதுடன், வலுக்கட்டாயமாக அந்தரங்க உறுப்புகளைப் பிடித்து பாலியல் ரீதியாக துன்புறுத்தினார் என்று அப்பெண் குற்றம் சாட்டியுள்ளார். இதேபோல் புகழ்பெற்ற பாடகர் ஆக்சல் ரோஸ் (61 வயது) மீது நடிகையும் மாடலுமான ஷீலா கென்னடி வழக்கு தொடர்ந்துள்ளார். 1989 ஆம் ஆண்டு ஆக்சல் ரோஸ், தன்னை பாலியல் வன்கொடுமை செய்ததாக குற்றம்சாட்டியிருக்கிறார்.

அமெரிக்காவில் புதிதாக நடைமுறைக்கு வந்த நியூயோர்க் அடல்ட் சர்வைவர்ஸ் ஆக்ட் என்ற சட்டத்தின்கீழ் நியூயோர்க் நீதிமன்றத்தில் இந்த வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இச்சட்டம் கடந்த ஆண்டு மே மாதம் கையொப்பமிடப்பட்டது. பாலியல் துன்புறுத்தலால் பாதிக்கப்பட்டவர்கள், வழக்கு தொடருவதற்கான கால வரம்பு காலாவதியாகி விட்டாலும் அவர்கள் மீது மீண்டும் வழக்கு தொடர இந்த புதிய சட்டம் அனுமதிக்கிறது.

# சட்டவிரோத குடியேற்றத்தில் 3 ஆவது இடத்தில் இந்தியர்

அமெரிக்காவில் உள்ள பி.டபிள்யூ ஆராய்ச்சி மையம் நடத்திய ஆய்வு விபரங்கள் வெளியிடப்பட்டன. அமெரிக்காவுக்குள் பல்வேறு நாட்டவர் சட்டவிரோதமாக குடியேறுவது அதிகரித்து வருகிறது. அந்த வரிசையில் 3 ஆவது இடத்தில் இந்தியர்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஒக்ரோபர் முதல் 2023 ஆம் ஆண்டு செப்ரெம்பர் வரை 96,917 இந்தியர்கள் சரியான ஆவணங்களின்றி அமெரிக்காவில் குடியேறியுள்ளனர். 2019 முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தை ஒப்பிடும் போது இது 5 மடங்கு அதிகமாகும். அந்த ஆண்டில் 19,883 இந்தியர்கள் மட்டுமே சட்டவிரோதமாகக் குடியேறினர். அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறுபவர்களில் முதல் இடத்தில் மெக்சிக்கோ நாட்டவர் உள்ளனர். 2 ஆவது இடத்தில் எல் சால்வடார் நாட்டைச் சேர்ந்தவர்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காலிஸ்தான் பயங்கரவாதி பன்னூனை கொலை செய்ய முயற்சி:
# இந்திய அரசை சந்தேகிக்கும் அமெரிக்கா

காலிஸ்தான் பயங்கரவாதி குர்பத்வந்த் சிங் பன்னூனை கொலை செய்ய தீட்டப்பட்ட சதித் திட்டத்தை அமெரிக்க அதிகாரிகள் முறியடித்ததாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது குறித்த அதிகாரபூர்வ தகவல் எதுவும் வெளியாகவில்லை என்றாலும் அரசாங்க வட்டாரங்களிடம் இத்தகவலைப் பெற்றதாக பைனான்சியல் டைம்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும், இக்கொலை முயற்சியில் இந்திய அரசாங்கத்திற்கு தொடர்பு இருக்கலாம் என்பதால், இது குறித்து இந்தியாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும் பைனான்சியல் டைம்ஸ் கூறியுள்ளது. இதுவரை, இந்திய வெளியுறவு அமைச்சகம் இது குறித்து எந்தப் பதிலும் அளிக்கவில்லை.



"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
THEEMPUNAL தீம்புனல்

# உயிருக்கு அச்சுறுத்தலான பாடசாலைக் கட்டடங்கள்

நாடளாவிய ரீதியில் பல பாடசாலைகளில் காணப்படும் அபாயகரமான சில கட்டடங்கள் தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கல்வி அமைச்சுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் வெல்லம்பிட்டியவில் பாடசாலையொன்றின் சுவர் இடிந்து விழுந்ததில் ஆறு வயது மாணவி ஒருவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து, இதே போன்ற பல அபாயகரமான கட்டடங்கள் தொடர்பில் உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என அமைச்சு மற்றும் அது தொடர்பான அதிகாரிகள் பல தரப்பினரால் குற்றம் சுமத்தப்பட்டனர்.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவன பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் கலாநிதி ஆசிரியர் கருணாவர்தன இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்,

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் எப்போதும் பாடசாலைகளுக்குள் அவ்வாறான இடங்களை அடையாளம் காண தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், அவலங்களைத் தவிர்ப்பதற்காக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்து உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குவதாக தெரிவித்தார். பெரும்பாலான நேரங்களில் மேற்கூறிய அமைச்சகத்தால் கோரப்படும் போது அந்த இடங்களுக்குச் சென்று நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கிறது.

சில சமயங்களில், கட்டடத்தை பழுதுபார்ப்பதற்கு பதிலாக முழுக்கட்டடத்தையும் அகற்றுமாறு அதிகாரிகளிடம் கேட்கிறார்கள். இருப்பினும், அது குறிப்பிட்ட இடத்தின் தன்மையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. தற்போது, மண்சரிவு ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகமுள்ள பகுதிகளில் அமைந்துள்ள பாடசாலைகள் தொடர்பில்தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மிகவும் அவதானமாக இருக்கிறது.

அமைச்சும் அதன் பொறியியலாளர்களும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் உதவியை நாடும் போதெல்லாம், அவர்கள் வருகை தந்து உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் கலாநிதி கருணாவர்தன கூறினார்.

இதேவேளை, கடந்த வாரம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய கல்வி அமைச்சர் சட்டத்தரணி கலாநிதி சுசில் பிரேமஜயந்த, கொழும்பில் உள்ள தர்ஸ்டன் கல்லூரி மற்றும் தங்காலை பாலிகா வித்தியாலயம் உட்பட குறைந்தது 74 பாடசாலைகளில் இவ்வாறான ஆபத்தான கட்டடங்கள் காணப்படுவதாகத் தெரிவித்தார். எனவே, இதுபோன்ற பாழடைந்த கட்டடங்களில் இருந்து குழந்தைகளை வெளியேற்ற பள்ளி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்றார். கட்டடங்கள் புனரமைக்கப்படும் வரை குழந்தைகளுக்கான மாற்றுத் தீர்வுகளைக் காணுமாறு பள்ளி நிர்வாகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். எவ்வாறாயினும் கொவிட் 19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக 2021 மற்றும் கடந்த ஆண்டு (2022) பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்று அமைச்சர் தெரிவித்தார்.

பாடசாலைகளுக்குக் கட்டடங்கள் கட்டிக் கொடுப்பதற்கு நிதி ஒதுக்கப்படுகிறது. அந்த நிதி செல்வாக்குள்ள பாடசாலைகளுக்குத் திருப்பி விடப்படுகிறது. இடிந்து விழும் நிலையில் உள்ள பாடசாலைகளின் கட்டடங்களைக் கண்டறிந்து புனரமைப்பதற்கான ஒழுங்கமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

# பொத்துவில் ஆதார வைத்தியசாலையை மத்திய அரசாங்கம் பொறுப்பேற்கும்



பொத்துவில் ஆதார வைத்தியசாலை மிக விரைவில் மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு பாரியளவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும் இதற்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட புதிய நிர்வாகக் கட்டடத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

சுற்றுலாத்துறைக்குப் பெயர்போன அருகம்பே பிரதேசம் இங்கு அமைந்திருப்பதால் இவ்வைத்தியசாலையை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டிய அவசியத்தை ஜனாதிபதியும் வெளிப்படுத்தியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் இதன்போது சுட்டிக்காட்டினார்.

பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அப்துல் றஹீம் தலைமையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்து கொண்டு புதிய நிர்வாகக் கட்டடத்தை திறந்து வைத்தார்.

# மாகாணம் செழிக்க மரம் நடுவோம் வேலைத்திட்டம்

கிழக்கு மாகாணத்தில் 1000 பயன்தரும் மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர்கள் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற மரம் நடும் நிகழ்வு நேற்று (22) நிந்தவூர் மாவட்ட மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இந்த மரம் நடும் நிகழ்வு சங்கத்தின் பிரதித் தலைவர் ஏ.சி. அயாத்து முஹம்மது தலைமையில் இடம்பெற்றது.



கல்முனை பிராந்திய ஆயுள்வேத வைத்தியசாலையில் "மாகாணம் செழிக்க மரம் நடுவோம்" எனும் தொனிப்பொருளில் கிழக்கு ஆயுள்வேத இணைப்பாளரும் நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான வைத்தியர் எம்.ஏ.நபீல் கலந்துகொண்டு மரத்தை நாட்டி வைத்தார்.

இந்நிகழ்வில், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஏ.ஆர்.எம்.றிம்ஸான், பொருளாளர், உறுப்பினர்கள் மற்றும் வைத்தியர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இத்திட்டத்தின் முன்னெடுப்பில், அம்பாறை மாவட்டத்தில் பல பிரதேசங்களில் இதுவரை 378 பயன்தரும் மரக்கன்றுகளை நாட்டி வைக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர்கள் சங்கத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஏ.எல். முஹம்மது அபுபக்கர் இதன்போது தெரிவித்தார்.

# சித்தங்கேணி இளைஞனின் மரணத்துக்கு பேர்ள் அமைப்பு கவலை

இலங்கையில் காணப்படும் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படும் கலாசாரம் முடிவிற்கு கொண்டுவரப்படும் வரை தமிழ் மக்களிற்கான சுயநிர்ணய உரிமையை உள்ளடக்கிய ஆக்கபூர்வமான அரசியல் தீர்வு சாத்தியமாகும் வரை நிலையான அமைதியோ உறுதித்தன்மையோ காணப்படாது என்பதை வட்டுக்கோட்டை இளைஞர் அலெக்சின் மரணம் மீண்டும் உணர்த்தியுள்ளதாக சமத்துவம், நிவாரணத்திற்கான மக்கள் அமைப்பான பேர்ள் அமைப்பு தெரிவித்துள்ளது.

நாகராஜா அலெக்ஸ் உயிரிழப்பதற்கு முன்னர் தாம் காவல்துறையினரின் பிடியில் அனுபவித்த ஈவிரக்கமற்ற சித்திரவதைகள் குறித்து தெரிவித்த காணொளி சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்தது. இந்த நிலையில், ஸ்ரீ லங்கா அரசாங்கத்தை பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்துவதற்கு சர்வதேச சமூகம் தவறியுள்ளதன் காரணமாக அலெக்சின் மரணம் நிகழ்ந்துள்ளதாக பேர்ள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழர்களிற்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் தொடர்ந்து இழைக்கப்படும் குற்றங்களிற்கு நீதியை வழங்கப் போவதில்லை மற்றும் பொறுப்புக்கூறலில் ஈடுபடப்போவதில்லை என்பதை வெளிப்படுத்துவதில் இலங்கை வலுவான அரசியல் உறுதிப்பாட்டை மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தி வருவதாக பேர்ள் அமைப்பு தெரிவித்துள்ளது.

# மாணவர்களை லஞ் ஷீட் உண்ண வைத்த அதிபர் இடமாற்றம்

பாடசாலை மாணவர்களை உணவு சுற்றும் தாள்களை உண்ணுமாறு கட்டாயப்படுத்திய ரம்புக்பிட்டிய மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கம்பளை வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என பாராளுமன்றத்தில் இன்று (23) விசேட உரையொன்றை ஆற்றிய கல்வி அமைச்சர் இதனைத் தெரிவித்தார். மத்திய மாகாண கல்விப் பணிப்பாளரிடம் நேற்று மேலதிக தகவல்களை அமைச்சர் பெற்றுள்ளார்.

இப்பாடசாலை பொலித்தீன் அற்ற வலயமாகப் பராமரிக்கப்படுவதால், குறித்த மதிய உணவுத் தாள்கள் மற்றும் செய்தித்தாள்களை சாப்பிடுமாறு சம்பந்தப்பட்ட மாணவர்களை அதிபர் வற்புறுத்தியுள்ளார்.

இரண்டு பாடசாலை மாணவர்கள் நேற்று காலை நாவலப்பிட்டி வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றதாக கல்வி அமைச்சர் தெரிவித்தார். சம்பவத்திற்கு முகங்கொடுத்த ஏனைய ஐந்து மாணவர்களும் இன்று (23) பாடசாலைக்கு வந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.


# வெளிநாட்டுத் திரைப்பட இறக்குமதிக் கட்டணம் குறைப்பு

வெளிநாட்டுத் திரைப்படங்களின் காட்சிக்கான சட்டபூர்வ உரிமத்தைப் பெறுவதற்கான விண்ணப்பக் கட்டணத்தைக் குறைக்க வெகுஜன ஊடக அமைச்சு தீர்மானித்துள்ளது. இது தொடர்பான கட்டணம் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



வெளிநாட்டுத் திரைப்படம் ஒன்றை நாட்டில் திரையிடுவதற்கான சட்டபூர்வ அனுமதிப் பத்திரத்திற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் 40,000 ரூபா கட்டணம் அறவிடப்பட்டது. புதிய திருத்தத்தின் பிரகாரம் 30,000 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாக வெகுஜன ஊடக அமைச்சு தெரிவித்துள்ளது.

# முல்லைத்தீவில் துப்பாக்கியுடன் ஒருவர் கைது



சட்டவிரோதமாக, பதிவுகளின்றி இடியன் துப்பாக்கி ஒன்றை வைத்திருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பிரகாரம் நேற்று (22) கொக்குளாய் கிழக்குப்பகுதியிலுள்ள வீட்டிற்குச் சென்ற பொலிஸார் வீட்டினை சோதனை செய்த போது பதிவுகள் ஏதுமின்றி சட்டவிரோதமாக துப்பாக்கி ஒன்றை வைத்திருந்ததன் பேரில் 32 வயதுடைய சந்தேகநபரை கைது செய்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குளாய் பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன், விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை இன்றைய தினம் (23) நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# ஆறுகளின் நீர்மட்டம் வேகமாக உயர்வு




நாடளாவிய ரீதியில் பெய்து வரும் கடும் மழையினால் களனி, களு, நில்வலா ஆகிய ஆறுகளின் நீர்மட்டம் வேகமாக அதிகரித்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தனகலு ஓயா மற்றும் மஹா ஓயா ஆகியவற்றின் நீர்மட்டமும் அதிகரித்து வருவதாக அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 100ற்கும் மேற்பட்ட ரயில்கள் தடம் புரண்டன

ஜனவரி முதல், ஒக்ரோபர் வரையிலான காலப் பகுதியில் 109 ரயில்கள் தடம் புரண்டதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

சாதாரண ரயில் பாதைகளில் 50 ரயில்களும் ரயில்



நிலையங்களில் 59 ரயில்களும் தடம் புரண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் தடம் புரள்வுகள் தொடர்பாக துணை ரயில்வே பொது மேலாளர் என்.ஜே.இதிபொலகே தெரிவிக்கையில் புகையிரதப் பாதையின் சட்டவிதிகளில் காணப்படும் குறைபாடுகள், புகையிரதப் பெட்டிகளில் ஏற்பட்ட குறைபாடுகளே இவ்வாறு தடம் புரள்வுகளுக்கு முக்கிய காரணம் என்றார்.

# நான்கு பேருக்கு மரண தண்டனை விதிப்பு

பிட்டிகல-அமுகொடை பிரதேசத்தில் கடந்த 2005 ஆம் ஆண்டு, வாள் மற்றும் பொல்லுகளினால் தாக்கி ஒருவரை கொலை செய்து மேலும் ஒருவரை காயப்படுத்திய கொலை குற்றச் செயல்கள் தொடர்பாக பலப்பிட்டி மேல் நீதிமன்றில் இடம்பெற்ற நீண்ட வழக்கு விசாரணையின் பின்னர் நான்கு பிரதிவாதிகளுக்கு நேற்று மரண தண்டனை விதிக்கப்பட்டது.

# வெற்றிடமாகவுள்ள பாதுகாப்பு தலைமை அதிகாரி பதவி

இராணுவப் பாதுகாப்பு படைகளின் தலைமை அதிகாரி பதவி இன்னும் வெற்றிடமாக இருப்பதாக இராணுவத் தலைமையக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவப் பாதுகாப்பு படைகளின் தலைமை அதிகாரியாக பதவி வகித்த மேஜர் ஜெனரல் சஞ்சய் வனசிங்க ஓய்வு பெற்று ஒன்றரை மாதங்களாக இந்தப் பதவி வெற்றிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இராணுவத்தின் நிர்வாகப் பணிகளில் மிக உயரிய பதவியான இராணுவப் பாதுகாப்பு படைகளின் தலைமை அதிகாரி பதவிக்கு அதிகாரி ஒருவர் நியமிக்கப்படாததால், பல நிர்வாகச் சிக்கல்களும் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இராணுவப் பாதுகாப்பு படைகளின் தலைமை அதிகாரி பதவிக்கு அதிகாரி ஒருவரின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதன்படி உரிய நியமனம் ஜனாதிபதியால் வழங்கப்பட வேண்டும் எனவும் இதுவரையில் நியமனம் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மண்சரிவில் அகப்பட்ட யுவதிகள் இருவர் மரணம்

உடுவர, ஹாலிஎல வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் இரண்டு யுவதிகள் மரணமானார்கள்.



மண்ணுக்குள் புதையுண்ட இருயுவதிகளும் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமானார்கள்.

# விடைபெறுகிறார் ராகுல் ட்ராவிட்

இந்தியக் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து ராகுல் ட்ராவிட் வெளியேறத் தயாராகிறார். 2003 இல் வீரராக அவுஸ்திரேலியாவிடம் இறுதிப் போட்டியில் தோல்வியைச் சந்தித்த ராகுல் ட்ராவிட் 2007 இல் கப்டனாக படுதோல்வியைச் சந்தித்து தற்போது பயிற்சியாளராக 2023 உலகக் கிண்ணத்தை வெல்ல முடியாமல் விடை பெற உள்ளார்.

2021 ஆம் ஆண்டு நடைபெற்ற ரி20 உலகக் கிண்ணப் போட்டியுடன் விடைபெற்ற ரவி சாஸ்திரிக்கு பின் புதிய பயிற்சியாளராக பொறுப்பேற்ற ராகுல் ட்ராவிட் பதவிக் காலம் இத் தொடருடன் நிறைவு பெற்றுள்ளது.

ராகுல் ட்ராவிட் தலைமையில் 2023 ஆசியக் கிண்ணம் தவிர்த்து 2022 ஆசிய, ரி20 உலகக் கிண்ணம், 2023 டெஸ்ட் சம்பியன்ஷிப், 2023 உலக கக் கிண்ணம் இறுதிப் போட்டிகளில் இந்தியா தோல்விகளையே சந்தித்தது.

இந்திய அணியின் அடுத்த பயிற்சியாளராக வருவதற்கு வி.வி.எஸ்லட்சுமன், ஆஷிஷ் நெஹ்ரா ஆகியோருக்கிடையில் போட்டி நிலவி வருகி றது. அதில் 2022 ஐ.பி.எல் கோப்பையை குஜராத் துக்காக வென்ற அனுபவமிக்க நெஹ்ராவை விட தற்போது என்சி.ஏ இயக்குநராகவும் இந்திய வீரர்களால் மதிக்கப்படும் அளவுக்கு தகுதியும் திறமையும் கொண் டுள்ள லக்ஷ்மன் புதிய பயிற்சியாளராக நியமிக்கப்பட அதிக வாய்ப்புள்ளதாக செய்திகள் தெரிவிக் கின்றன.





ராகுல் ட்ராவிட் அப்பதவியில் நீடிக்க விரும்பவில்லை. மேலும் தம்முடைய சொந்த ஊரான பெங்களூரில் இருக்கும் என்சிஏவில் ஏற்கெனவே செய்த அதே இயக்குநர் வேலையைச் செய்வதற்கு அவர் விரும்புகிறார் என்று கூறினார். மேலும் விக்ரம் ரத்தோர், பாராஸ் மாம்ப்ரே போன்ற துணைப் பயிற்சியாளர்கள் லக்ஷ்மன் விரும்பினால் மட்டுமே மாற்றம் செய்யப்படுவார்கள் இல்லையேல் தொடர்வார்கள் என்று தெரியவருவது குறிப்பிடத்தக்கது. அஹமதாபாத்தில் பி.சி.சி.ஐ நிர்வாகிகளைச் சந்தித்த லக்ஷ்மன் இதைப் பற்றி பேசியுள்ளார். அதில் இந்திய அணியின் நீண்டகால பயிற்சியாளராக ஒப்பந்தம் செய்யப்படுவதற்கு அவர் தன்னுடைய விருப்பத்தை தெரிவித்துள்ளார் என்ற தகவல் வெளியாகி உள்ளது. லக்ஷ்மனின் பயிற்சியாளர் பயணம் அடுத்த தென்னாபிரிக்க சுற்றுப்பய ணத்தில் துவங்கலாம்.

# உலகக்கிண்ண தகுதிச் சுற்றில் சீனா தோல்வி

ஆசியக் கண்ட உதைபந்தாட்ட உலகக்கிண்ண தகுதிச் சுற்றில் சீனாவை எதிர்த்து விளையாடிய தென்கொரியா 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றதன் சி குழுவில் முன்னணி இடத்தைப் பிடித்தது.

11 ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டியை சோன் கோலாக மாற்றினார்.

இடைவேளைக்கு முன் ஹெடர் இரண்டாவது கோலை அடித்தார். ஆரம்ப நிமிடங்களில் சீனாவின் தற்காப்பு தளர்த்தப்பட்டது. 87 ஆவது நிமிடத்தில் ஜங் சியுங்- ஹியூனின் புல்லட் ஹெடருக்கு உதவிய தென் கொரியாவின் மூன்றாவது கோலிலும் சோன் முக்கிய பங்கு வகித்தார். இத்தோல்வியால் சிங்கப்பூரை 3-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய தாய்லாந்தைப் பின்தள்ளி மூன்று புள்ளிகளுடன் குழுவில் சீனா மூன்றாவது இடத்தில் உள்ளது.



பி பிரிவில், ஜப்பான் 5-0 என்ற கோல் கணக்கில் சிரியாவை வீழ்த்தி 6 புள்ளிகளுடன் குழுவில் முதலிடம் பிடித்தது. அவுஸ்திரேலியா 1-0 என்ற கோல் கணக்கில் பாலஸ்தீனத்தை வீழ்த்தியது, அதே நேரத்தில் கட்டார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவுதி அரேபியாவும் வெற்றி பெற்றன.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 23.11.2023 அன்று வெளியிடப்பட்டது.